සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## குடியியற் கல்வி - පුරවැසි අධ්‍යාපනය

தரம் : **7** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி I**

எல்லா வினாக்களுக்கும் விடைதருக.

♦ **1-5 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

1. சமூக அமைப்பில் காணப்படும் குடும்ப அமைப்புக்களுள் விரிந்த குடும்பம் ……………… எனவும் அழைக்கப்படும்.
   (சிறு குடும்பம் / கருக்குடும்பம் / கூட்டுக் குடும்பம்)

2. இளம் சமுதாயத்தினருக்கு சம்பிரதாயங்களை வழங்கும் அலகாக ……………………………… பிரதான இடத்தை வகிக்கின்றது.
   (பாடசாலை / குடும்பம் / சமயம்)

3. பாடசாலை மாணவத்தலைவனாக தெரிவு செய்யப்பட்ட மாணவன் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறை………………………………ஆகும்.
   (தவறு செய்யும் மாணவனைத் தண்டித்தல்/ மாணவர்களிடம் வேலை வாங்குதல் / மாணவர்களுடன் சுமுகமாக நடந்து கொள்ளல்)

4. மாணவர்களின் நீண்ட கால வாழ்க்கைக் குறிக்கோள்களில் ஒன்று ……………………ஆகும்.
   (மாணவத் தலைவராதல் / ஆசிரியராதல் / மாணவர் சங்கத்தில் தலைவராதல்)

5. சிறுவர்களையும் முதியோரையும் பாதுகாப்பதற்காக சட்டத்தை வகுக்கும் போது முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது ………………………… சட்டத்துக்காகும்.
   (நாட்டுக்குப் பொருத்தமான / வேறு நாடுகளில் செயற்படுத்தப்படும் / தனிநபர்களுக்குப் பொருத்தமான)

♦ **6-10 வரையுள்ள வினாக்களில்** A **நிரலிலுள்ளவற்றுக்குப் பொருத்தமான விடையை** B **நிரலுடன் பொருத்துக**

| A | B |
|---|---|
| 6. அழகியற் செயற்பாடு | A. கட்டளைகளைப் பின்பற்றல் |
| 7. விளையாட்டின் மூலம் விருத்தியடையும் | B. சனசமூக நிலையங்கள் |
| 8. உள்ளக விளையாட்டு | C. மேசைப்பந்து |
| 9. சமூக நன்மைக்கு உதவும் | D. பொருத்தமற்ற வீடியோ படங்கள் |
| 10. ஒருவனின் ஒழுக்கக் கேட்டிற்குக் காரணம் | E. சித்திரம் வரைதல் |

- **11-15 வரையுள்ள கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) அடையாளத்தையும் பிழையாயின் (X) அடையாளத்தையும் இடுக.**

11. உணவும் போசணையும் பாதுகாப்பும் உமக்குக் குடும்பத்தினால் கிடைக்கும் உரிமையாகும் ( )
12. தாயின் சகோதரனனின் மனைவியும் தகப்பனின் சகோதரியும் உமக்கு மாமி ஆகும். ( )
13. தந்தையின் தம்பியின் மனைவியும் தாயின் தங்கையும் உமக்கு சின்னம்மா ஆகும். ( )
14. தகப்பனின் மூத்த சகோதரன் சிறிய தகப்பனார் என அழைக்கப்படுவார். ( )
15. குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் முதலில் வீட்டுக்கு வருவது உறவினர்களாவர். ( )

- **16-20 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிக பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

16. குடும்பத்தில் உள்ளவர்கள் தினமும் மதவழிபாடுகளில் ஈடுபடுதல்
    1. சட்டமாகும் 2. கடமையாகும் 3. சம்பிரதாயமாகும் 4. பொறுப்பாகும்

17. தரவுகளையும் தகவல்களையும் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமற்ற ஊடகம்
    1. இணையம் 2. வதந்திகள் 3. தொலைக்காட்சி 4. செய்திப்பத்திரிகை

18. பாடசாலை செல்லும் வயதில் நீர் எதிர்கொள்ளும் சவால்
    1. மனவிரக்தி
    2. பொருத்தமற்ற நண்பர்களின் நட்பு
    3. போட்டிப் பரீட்சைக்கு முகம் கொடுத்தல்
    4. திடீர் அனர்த்தம் ஏற்படல்

19. ஊழியர் சேமலாப நிதி ஓய்வுதியம் பெறுவதற்கான உரிமை எவ்வகையான உரிமையாகும்
    1. சிறுவர் உரிமையாகும் 2. பெண்கள் உரிமையாகும்
    3. தொழில் உரிமையாகும் 4. அரசியல் உரிமையாகும்

20. சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு நீர் பின்பற்றவேண்டிய பொருத்தமான செயற்பாடு
    1. புறக்கணித்தல் 2. முன்னாயத்தம
    3. காலம் தாழ்த்தல் 4. விட்டு ஒதுங்குதல்

(20 x2 =40 புள்ளிகள்)

பகுதி II

முதலாம் வினா கட்டாயமானது.
முதலாம் வினாவுக்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக.

1) 1. A படத்தில் காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தைப் பெயரிடுக (2 புள்ளி)

2. ஓய்வு நேரங்களில் குடும்ப அங்கத்தவர்களுடன் நேரத்தைக் கழிப்பதற்கான சந்தர்ப்பங்கள் 3 எழுதுக (3 புள்ளி)


3. மக்கள் தமது அன்றாட தேவைகளை நிறைவு செய்து கொள்ள மேற்கொள்ளக் கூடிய சுயதொழில்கள் 2 தருக. (2 புள்ளி)

4. இங்கு தரப்பட்டுள்ள B படத்தின் படி விவசாயத்துறையுடன் தொடர்புபட்ட தொழில்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளி)

5. விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்கள் 3 குறிப்பிடுக (3 புள்ளி)

6. C படத்தில் காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தை குறிப்பிட்டு அது எந்த தொழிலோடு சம்பந்தப்பட்டதாகும்? (3 புள்ளி)

(மொத்தம் 16 புள்ளிகள்)


A


B


C

2) 1. D படத்தில் காட்டப்பட்டுள்ள குடும்ப வகை எது?

2. அவ்வாறான குடும்பமொன்றில் வசிக்கும் நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் 4 எழுதுக.

3. இக்குடும்பம் மூலம் சிறுவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் 5 எழுதுக. (11புள்ளிகள்)


D

3) 1. பாடசாலையில் கற்கும் மாணவராகிய உங்கள் எதிர் கால வாழ்க்கைக் குறிக்கோள்கள் 4 குறிப்பிடுக.

2. நீர் குறிப்பிட்ட குறிக்கோள் ஒன்றைத் தெரிவு செய்து அதனை அடைவதற்கு நீர் எடுக்கும் நடவடிக்கைகள் 3 குறிப்பிடுக.

3. உங்கள் வாழ்க்கைக் குறிக்கோளை அடைய முயற்சிக்கும் போது எதிர்நோக்கும் சவால்கள் 4 தருக.

(11 புள்ளிகள்)

4) 1. வகுப்பறையில் கேலி செய்ததனால் கோபத்தக்குள்ளான உமது நண்பனிடம் வெளிப்படும் மாற்றங்கள் 4 இனைத் தருக.

2. மகிழ்ச்சி ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஒருவரிடம் இருந்து வெளிப்படும் நடத்தைகள் 4 தருக.

3. பொருத்தமற்ற மனவெழுச்சி நிலைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் 3 குறிப்பிடுக. (11புள்ளிகள்)

5) 1. கீழே A,B,C,D என தரப்பட்டுள்ள படங்களின் காட்டப்படும் மதவழிபாட்டு சந்தர்ப்பங்களைத் தருக.

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| A | B | C | D |


2. மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களின் படி கீழ்வரும் அட்டவணையைப் புரணப்படுத்துக.

| சமயம் | சமயத்துக்குரிய வேதநூல் |
|---|---|
| A. ............................ | .................................................... |
| B. ............................ | .................................................... |
| C. ............................ | .................................................... |
| D. ............................ | .................................................... |

3. மேற்கூறப்பட்ட மதவழிபாட்டுத் தளங்களினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் பொதுவான நோக்கம் 3 எழுதுக.

(11 புள்ளிகள்)

6) 1. ஒருவர் தமது வாழ்க்கையில் திருப்தி கொள்வதற்கு தேவையான உரிமைகளின் பண்புகள் அல்லது இயல்புகள் மூன்றினை கீழ் உள்ள இடைவெளிகளில் எழுதுக.



2. உரிமைகளின் வகைகளைத் தெரிவு செய்து A நிரலையும் B நிரலையும் தொடர்பு படுத்துக

A

அரசியல் உரிமை

சிவில் உரிமை

B

1. கருத்து வெளியிடும் சுதந்திரம்
2. வாக்களிக்கும் சுதந்திரம்
3. விரும்பிய தொழில் செய்தல்
4. அரசாங்கத்தை விமர்சனம் செய்தல்
5. விரும்பிய அரசியல் கட்சியில் சேர்தல்
6. சமத்துவம் பேணல்
7. விரும்பிய அரசாங்கத்தைத் தெரிவு செய்தல்
8. விரும்பிய இடத்தில் வாழுதல்

(11புள்ளிகள்)

7) தரப்பட்டுள்ள அம்சங்களைக் கவனித்து குறுக்கெழுத்துச் சட்டகத்தைப் பூரணப்படுத்துக

<u>மேலிருந்து கீழ்</u>

1. மனவெழுச்சிப் பண்புகளில் ஒன்று
2. குடும்பத்தின் மூலம் சிறுவர்களுக்கு இது கிடைக்கும்
4. அரசியல் உரிமை மூலம் இதனைப் பயன்படுத்தலாம்
8 அம்மாவின் அப்பா இவ்வாறு அழைக்கப்படுவார்
10 மனிதனுடைய அத்தியவசியத் தேவைகளில் ஒன்று

<u>இடமிருந்து வலம்</u>

3. சவால்களை வெற்றி கொள்ள இது அவசியமாகும்
4. இது மனிதனைப் புரணமாக்கும்
5. சமூகத்தின் மிகச் சிறிய அலகு
6. இதனை அரசாங்கத்துக்குச் செலுத்துவது சட்டரீதியான கடமையாகும்
7. விளையாடுவதற்குரிய ஓர் இடம்
.9 சித்திரை மாதம் கொண்டாடப்படும்

(11புள்ளிகள்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 10 |
| | | 1 ம | | 2 | | |
| | | | | 3 து | | |
| | | | | | | |
| | | | | ப் | | |
| | 4 | சி | | | | |
| | | | | | | |
| | 5 கு | | | | | |
| 6 | | | | | | |
| | 7 | 5 தா | | | | |
| | | | | | | |
| 1 பு | | | ண் | | | |

